சுருக்கம்

வீட்டுவசதி – தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பெயர் "தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்" எனப் பெயர் மாற்றம் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (குமா2(2)) துறை

அரசாணை (நிலை) எண்.103 நாள் 01.09.2021

பிலவ வருடம், ஆவணி-16

திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டது:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் வெளியிட்ட அறிவிப்பு, நாள் 01.09.2021.

**************

ஆணை:

நாட்டிலேயே முன்னோடி மாநிலமாக நகர குடிசைப்பகுதிகளில் வாழும் ஏழை மக்களின் வாழ்வினை மேம்படுத்த முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் 1970 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. காலப்போக்கில் "குடிசைப்பகுதிகளை மாற்றுதல்" என்னும் கருத்து "நிலையான வாழ்வாதார வாய்ப்புகளுடன் குடிசைப்பகுதிகள் மறு குடியமர்வு மற்றும் மறு வாழ்வு" என்னும் பரிணாம வளர்ச்சி பெற்றுள்ளது. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பணிகள் பன்முகப்படுத்தப்பட்டு குடிசைப்பகுதிகளை அதே இடத்தில் மேம்படுத்துதல், குடிநீர் விநியோகம், கழிவுநீரகற்று வசதி, பள்ளிகள், மருத்துவ வசதிகள் போன்ற வசதிகளுடன் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்து உறைவிடங்களில் மறுகுடியமர்வு செய்தல் போன்ற பணிகளை நிறைவேற்றி வருகின்றது. வாழ்வாதாரத்தை மேம்படுத்த திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் உள்ளிட்ட சமுதாய வளர்ச்சிப் பணிகளை செய்து வருகின்றது.

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 01.09.2021 அன்று கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:-

"கோட்டையிலே இருந்தாலும் குடிசைவாழ் மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்தைப் பற்றியே நினைத்தவர் தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். முதன் முறையாக ஆட்சிக்கு வந்தபோது, அம்மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்காக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தைத் தொடங்கி பல்லாயிரக்கணக்கான அடுக்குமாடி குடியிருப்புகளைக் கட்டித் தந்தார் முதல்வர் கலைஞர் அவர்கள். அன்றைய ஒன்றிய அமைச்சராக இருந்த பாபு ஜெகஜீவன்ராம் அவர்கள், கலைஞரின் இந்த சிந்தனையைப் பாராட்டினார். இந்தியாவின் மற்ற மாநிலங்களும் இதனைப் பின்பற்ற வேண்டும் என்றார். அத்தகைய குடிசை மாற்று வாரியம் இன்று வரை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

ஏழை எளிய மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்காக உருவாக்கப்பட்ட இந்த வாரியம் இனிமேல் "தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்" என்று செயல்படும் என்பதை இந்த மாமன்றத்துக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

குடிசைகளை மாற்றுவது மட்டுமல்ல குடிசையில் வாழும் மக்களின் வாழ்விடத்தை, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வாரியமாக அது செயல்படும், செயல்படவேண்டும் என்பதால் இந்த பெயர் மாற்றம் செய்யப்படுகிறது".

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேற்படி அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பெயரை, "தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்" (Tamil Nadu Urban Habitat Development Board) எனப் பெயர் மாற்றம் செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலும், தமிழ்நாடு குடிசைப்பகுதி (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) சட்டம் 1971-வுக்கு உரிய திருத்தங்கள் தனியே வெளியிடப்படும்.

//ஆளுநரின் ஆணைப்படி//

வெ. இறையன்பு
அரசு தலைமைச் செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், சென்னை-5
அனைத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர்/ முதன்மைச் செயலாளர்கள்/
செயலாளர்கள், தலைமைச்செயலகம், சென்னை-9
செயலாளர், சட்டமன்றப் பேரவைச்செயலகம், சென்னை-9
அனைத்து செயலகத் துறைகள், தலைமைச்செயலகம், சென்னை-9
நிதி(BPE / Hg)த்துறை, தலைமைச்செயலகம், சென்னை-9
பொது(சிறப்பு அ,(ம) ஆ)த்துறை, தலைமைச்செயலகம், சென்னை-9
ஆளுநர் அலுவலகம், ராஜ்பவன், சென்னை-22
அனைத்துத் துறை தலைவர்கள்.
தலைவர், தமிழ்நாடு கட்டடம் மற்றும் மனை விற்பனை ஒழுங்குமுறைக் குழுமம் /
மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம், சென்னை –8,
மாநில தகவல் ஆணையம், தேனாம்பேட்டை, சென்னை-18
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
அனைத்து மாவட்ட நீதிபதிகள்/ அனைத்து முதன்மை நீதித்துறை மாஜிஸ்டிரேட்கள்
முதன்மை மாநில கணக்குத் துறைத்தலைவர்,
(கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை-18
மாநில கணக்குத் துறைத்தலைவர் (தணிக்கை-I), சென்னை-18
மாநில கணக்குத் துறைத்தலைவர்(தணிக்கை-II), சென்னை-18
மாநில கணக்குத் துறைத் தலைவர் (உதபி) சென்னை-9 /மதுரை
முதன்மைச் செயலாளர் / ஆணையர், கருவூலக் கணக்குகள் துறை, சென்னை-35
சம்பளக் கணக்குகள் அலுவலகம் (கிழக்கு), சென்னை-58
சம்பளக் கணக்குகள் அலுவலகம் (தலைமைச்செயலகம்), சென்னை-9
சம்பளக் கணக்குகள் அலுவலகம் (தெற்கு), சென்னை-35
சம்பளக் கணக்குகள் அலுவலகம் (வடக்கு), சென்னை 1/79
சம்பளக் கணக்குகள் அலுவலகம், மதுரை-1
அனைத்து கருவூல அலுவலர்கள் / அனைத்து சார் கருவூல அலுவலர்கள்
தலைவர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-3
ஆணையாளர், ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம், சென்னை-108
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை-104
ஆணையாளர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-3

ஆணையாளர்கள், மதுரை/கோயம்புத்தூர்/திருச்சிராப்பள்ளி/சேலம்/ திருநெல்வேலி/
ஈரோடு/ திருப்பூர்/தூத்துக்குடி/ வேலூர்/ தஞ்சாவூர்/ திண்டுக்கல்/ நாகர்கோவில்/ஓசூர்/ஆவடி
அனைத்து பிரிவுகள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னை – 9.

<u>நகல்</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
மாண்புமிகு ஊரகத்தொழில்கள் அமைச்சர் அலுவலகம், தலைமைச்செயலகம், சென்னை-9
அரசு தலைமைச்செயலாளர் அவர்களின் தனிச்செயலர், தலைமைச்செயலகம், சென்னை-9
இருப்புக்கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

1/9/2021

பிரிவு அலுவலர்

1/9/21